(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 262/2022 அ.சா.16

Name : திரு. சமயன்

Father's name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 16.10.2025.

முதல் விசாரணை:-

நான் கிராம உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகள் தெரியுமா என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. 2019ம் வருடம் மேல்மதுரையில் கிராம உதவியாளராக பணியாற்றினேன். அப்போது கிராம நிர்வாக அதிகாரியாக சுந்தரபாண்டி என்பவர் இருந்தார். 2019ல் ஒருநாள் எனக்கு தேதி ஞாபகமில்லை. VAO சுந்தரபாண்டி என்னை தெற்குவாசல் காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார். அங்கு போனேன். அங்கு ஏற்கனவே சுந்தரபாண்டி அறிக்கைகளில் கையெழுத்து போட்டிருந்தார். அதில் என்னை கையெழுத்து போடச் சொன்னார். கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என் முன்னிலையில் போலீசாரிடம் யாரும் வாக்குமூலம் கொடுத்தார்களா என்று கேட்டால் கொடுத்தார்கள். யார் கொடுத்தார்கள்

என்று எனக்கு ஞாபகமில்லை. கீரைத்துரை பக்கம் போலீசார் கூட்டிட்டு போனார்கள். கத்தி போன்ற பொருட்கள் எடுத்தார்கள். என்னென்ன பொருட்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. அதை யார் எடுத்து கொடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் 9 ஒப்புதல் வாக்குமூலங்களில் 2வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அவை **அ.சா.ஆ.16 முதல் 24** ஆகும். என்னிடம் காட்டப்படும் 4 கைப்பறுகை மகசரில் 2வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அவை **அ.சா.ஆ.25 முதல் 28** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பில் கோரிக்கை விடப்பட்டு, ஏற்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி அ.சா.ஆ.16 முதல் 24 ஒப்புதல் வாக்குமூலங்களில் கண்ட எதிரிகள் என் முன்னிலையிலும் VAO சுந்தரபாண்டியன் முன்னிலையிலும் அதில் குறிப்பிட்டுள்ள நேரத்தில், இடத்தில் தன்னிச்சையாக வந்து ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்ததாக காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அ.சா.அ-25 முதல் 28 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகளிடமிருந்து அதில் குறிப்பிட்டுள்ள தேதியில், இடத்தில், நேரத்தில் என் முன்னிலையிலும், VAO சுந்தரபாண்டியன் முன்னிலையிலும் கைபற்றப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை

Sd/- சமயன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.10.17 11:14:37 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.